# WORD OF CHRIST
# [கிறிஸ்துவின் வசனம்]

கொலோசெயர் 3:16

மரம் 2 கனி 1

ஆசிரியர் ஆகஸ்ட்
சகோ. அர்ச்சுனன் II கொரிந்தியர் 3;6 1993

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக.

இவ்விதழின் இராண்டாவது வருட தொடக்கத்தில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். தொடர்ந்து வெளிவரும் செய்திகளை படித்து ஆவிக்குரிய வளர்ச்சியடைய பிரயாசப்படுங்கள் வேத வசனங்களுக்கு கீழ்படிந்து ஆண்டவருடையகட்டளைகளுக்கு பயந்து, கிறிஸ்துவை தரித்த ஜீவியத்தை ஜீவிக்க உங்களை ஆண்டவருக்கு முழுவதுமாக ஒப்புக்கொடுங்கள்,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய கிருபை நம்மனைவரோடுங்கூட இருப்பதாக! ஆமென்!

ஆசிரியர்

## BLESSINS AND CURSINS

## துதித்தலும், சபித்தலும்

அன்பான சகோதரனே, சகோதரியே துதித்தலும் சபித்தலும் ஒரே வயிலிருந்து புறப்படுகிறது என் சகோதரரே இப்படியிருக்கலாகது என்று யாக் 3;10 ல்வாசிக்கிறோம். ஆம் பிரியமானவர்களே தேவனை துதிக்கின்ரேம் அதே நாவாலே சிலரை வாழ்த்துகிரேம் சிலரை சபிக்கிரேம் இது தேவனுடைய பார்வையில் சரியில்லாததாக இருக்கிறது மேலும் அதினாலே நாம் பிதாவாகிய தேவனை துதிக்கிறோம்தேவனுனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிரேம் என்று யாக் 3:9 ல் வாசிக்கிரேம் எல்லா மனுஷனும்தேவ சாயலின்படி உண்டாக்கப்பட்டு உள்ளான் ஆகையால் எந்த ஒரு மனுஷனை சபித்தாலும் அது தேவனை சபித்ததாக அர்த்தமாகிவிடுகிறது நாவானது சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளை பேசும் அதேபோல் சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டை கொளுத்தி விடுகிறது நாவும் நெருப்புத்தான் அது அநீதி நிறைந்த

உலகம் என்று பார்க்கின்றோம். நாம் பேசும் போது மிக கவனமாக இருந்து பொய்யை களைந்து பிறனுடனே மெய்யை பேச வேண்டும் வீண் பெருமைகளை நம்மை விட்டு அகற்ற வேண்டும். பரிசுத்தமான வார்த்தைகள் பக்தி விருத்திக்கு ஏதுவான வார்த்தைகள் நம் வாயில் இருந்து புறப்பட வேண்டும்.

என் சகோதரரே பாருங்கள், குதிரை நமக்குக்கீழ்படியும்படிக்கு அவைகளின் வாய்களின் கடிவாளம்போட்டு, அவைகளுடைய முழுச் சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். ஆனால் நம்முடைய நாவை அடக்க முடியவில்லை. கப்பல்களையும் பாருங்கள் அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும். கடுங் காற்றுகளால் அடிபட்டாலும் அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம் எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான அக்கானாலே திருப்பப்படுகிறது. ஆனால் நாவை அந்தப்படியே அடக்க முடியவில்லை வேதம் என்ன சொல்லுகிறது. யாக் 3;8ல் நாவை அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான வீஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.

ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும், கசப்புமான தண்ணீர் சுரக்குமா? என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும் திராட்சச்செடி அத்திப் பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுக் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது யாக் 3:11,12 ஆம் பிரிய நண்பரே இவைகள் எப்படி கொடுக்கமாட்டதே! அதுபோல் ஆவிக்குரியவர்களாகிய நாமும் கூட கிறிஸ்துவுக்கு ஏற்ற கனிகளை கொடுக்க வேண்டும். நம்மில் தூசனமான வார்த்தைகளோ. துன்மார்க்கமான எண்ணங்களோ, கெட்ட பழக்கவழக்கங்களோ ஒன்றும் இருக்க கூடாது. அனுதினமும் தேவ சித்தத்தை உணர்ந்து ஆவிக்குரிய வளர்ச்சியடைய பிரியப்பட வேண்டும் கர்த்தாவே என் வாய்க்கு காவல்வையும்; என் உதடுகளின் வாசலை காத்துக் கொள்ளும் சங் 141:3ல் தாவீது ஜெபித்தது போல் நாமும் தேவனிடத்தில் மன்றாடி ஜெபித்து சபித்தலை நம்மைவிட்டு அகற்ற வேண்டும் கர்த்தர் தாமே உங்களை வழி நடத்துவாராக ஆமென்

## ☆ சபை செய்திகள்

1) 11-7-93 அன்று சகோ. பெருமாளுக்கும் சகோதரி முருகேஷ்வரிக்கும் பரிசுத்த விவாகம் நடைபெற்றது. இத்திருமணத்தை சகோ. பன்னீர்தாஸ் பிலேமோன்ராஜ் மதுரை ஆகிய இருவரும் நடத்தி வைத்தார்கள்.

2) 24-7-93 அன்று சகோ. நாகராஜன் குடும்பத்தாருக்கு கர்த்தர் ஒரு பெண் குழந்தையை கொடுத்தார். தாயும் சேயும் நலமுடன் உள்ளனர்.

3) வத்தலக்குண்டு சபையார்களுக்கு கல்லறை தோட்டம் கிடைக்க ஜெபியுங்கள்.

## ★ பரிசு

ஜுலை மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்

1) சகோ. தமிழ்வாணன்-மேல்விஷாரம் 2) சகோதரி ஸ்டெல்லா வத்தலக்குண்டு

## ★ ஜுலை மாத இதழின் விடைகள்

1. கலங்கின கிணற்றுக்கும் கெட்டுப் போன அணைக்கும் நீதி 25:26
2. 70 பேர் நியா 9:2
3. தேவனுடைய ராஜ்யத்தை யோவா 3:3
4. வந்தாயிற்று மாற்கு 9:13
5. பைத்தியமாயிருக்கிறது I கொரி 3:19
6. தேவனால்
7. கீழ்படிந்து
8. ஆகான்
9. தேவன்
10. பாவம்

## ★ இம்மாத வேத அறிவுப் போட்டி

1. யாருக்கு சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்து இருக்கிறோம்?
2. கர்த்தருக்குப் பயப்படுதலே எதின் ஆரம்பம்
8. ஈசாக்கின் மகன் யாக்கோபுடைய ஆயுசு நாட்கள் எத்தனை வருஷம்
4. தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் எதற்கு தேவனாயிருக்கிறார்
5. உலகத்தில் அநேக என்ன தீர்க்கதரிசிகள் தோன்றிருக்கிறார்கள்?
6. யாருடைய இரக்கங்களுக்கு முடிவில்லை?
7. யாருடைய ஆண்டுகள் முடிந்து போவதில்லை?
8. தம்மை நம்புகிற அனைவருக்கும் கர்த்தர் எப்படியிருக்கிறார்?
9. உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது?
10. துதித்தலும் சபித்தலும் ஒரே வாயிலிருந்து புறப்படலாமா?

மூன்றாம் பக்கத்திலுள்ள முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும் கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்டர் கார்டில் எழுதி இம்மாதம் இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான எழுதுபவர்களுக்கு பரிசு அனுப்பப்படும்.

### அன்புடன் ஓர் அழைப்பு

கிறிஸ்துவின் வசன வாசகர்களுக்கான கருத்தரங்கு வருகின்ற 22-8-93 ல் கீழ்க்கண்ட விலாசத்தில் காலை 10 to 1 வரை நடைபெறும் அவ்வமயம் இது வரை வெளியிட்ட இதழ்களில் பரிசு அனேக இதழ்களில் பெற்றவர்களுக்கு கருத்தரங்கில் உற்சாக பரிசு கொடுக்கப்படும் தவறாது கலந்து கொண்டு பயன் பெறுங்கள்.

கலந்து கொள்ள வேண்டிய முகவரி:

**மார்னிங் ஸ்டார் ஆங்கில பள்ளி**
கணவாய்பட்டி ரோடு, தண்ணீர் டேங் சமீபம்,
வத்தலக்குண்டு அண்ணா மாவட்டம்
தமிழ்நாடு.

### கிறிஸ்துவின் சபையார் ஐக்கிய கூட்டம்:

கர்த்தருக்கு சித்தமானால் டிசம்பர் 11-ம் தேதி காலை 9 to மாலை 4 மணி வரை மதுரையில் நடைபெறும். இக் கூட்டங்கவில் பங்கு கொள்ள விரும்புகிறவர்கள். செப்டம்பர் இறுதிக்குள் ரூ. 10 மட்டும் அனுப்பி உங்கள் பெயரை பதிவு செய்து கொள்ளுங்கள். பயண செலவு உங்களுடையது மேலும் விபரங்கள் தேவைப்பட்டால் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**Bro. PONNEER DOSS**
Co-ordinator
No. 15. 5th Bharathiyar St,
S. S. Colony - MADURAI - 16

---

If Undelivered Please Return To:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU-624202. Anna Dt.**

---

**For Private Circulation only.**

---

Published by Batlagundu Church of Christ and
Printed at Shanthi Printers Batlgundu-62 4202.